★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 27உ சனி (10—3—56) ★ ★ வெளியூர்: மாசி 28உ ஞாயிறு (11—3—56) [இதழ் 229

75,86,805 டிக்கெட்டு இல்லாப் பிரயாணிகள்

1954—55-ம் ஆண்டில் இந்திய இரயில்வேக்களில் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்த 75 86,805 பேர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்; அவர்களிடமிருந்து ரூ 1·5 கோடி வசூல் செய்யப்பட்டது என்ற தகவலை, இரயில்வே மந்திரியின் மக்கள் சபைச் செயலாளர் ஷா நவாஸ்கான், இரயில்வே வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையில் தந்திருக்கிறார்.

இரயில்வேயில் டிக்கெட்டில்லா பிரயாணம் குறைந்துவருகிறது என்றாலும், இன்னும் பெரும் அளவில் அது நிலவத்தான் செய்கிறது என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

அகதிக் கன்னிப் பெண்களுக்கு அடிக்குது யோகம்!

ஜோடி சேர்ப்பதில் இந்தியப் பேரரசின் தீவிரம்!

ஒவ்வொரு மணப் பெண்ணிற்கும் திருமண மானியம் 200 ரூபாய்!

அகதிகள் புனர்வாழ்வில் மற்றும் ஒரு தண்டச்செலவு

கிழக்குப் பகுதியில் வயது வந்தும் மணம் முடித்துக் கொள்ள முடியாமல் காலங் கழித்துவரும் அகதிப் பெண்களுக்கு மணம் முடித்துவைப்பதில் இந்திய அரசாங்கம் தீவிரம் காட்டத் தொடங்கி இருக்கிறது.

ஒவ்வொரு மணப் பெண்ணுக்கும், அவளுடைய திருமணச் செலவிற்காக ரூ. 200 அளிப்பது என முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்தத் திருமண மானியத்தில் ஒரு 'சல்லி'யைக் கூட மணமகன் குடும்பத்திற்காகச் செலவிடக் கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்டு இருக்கிறது.

16 வயதுக்குட்பட்ட கன்னிப் பெண்கள் இத்திருமண மானியம் பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

கிழக்குப் பகுதியில் பல வீடுகளில் குடியிருக்கும் 40,000 நபர்களுள், பருவமடைந்தும் கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் ஏராளமாக இருப்பதாகவும், அவர்கள் திருமணம் குறித்து அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் பெருங்கவலை கொண்டிருப்பதாகவும், அக்கவலையைப் போக்க அவ்விளம் பெண்களுக்கு நல்வாழ்வு தேடித்தரவே, இத்திருமண மானிய ஏற்பாடு எனவும் கூறப்படுகிறது.

இவர்கள் வாழ்வு பெறுவதற்காக இதுவரை கோடிக் கணக்கில் பணம் செலவழிந்ததும், செலவழிந்து வருவதும் போதாது என்று, 'திருமண மானியம்' என்ற பெயரால் வேறு தண்டச் செலவு செய்ய இந்தியப் பேரரசு முன்வருகிறது! அகதிக் கன்னிப் பெண்களுக்கு அடிக்குது யோகம்!

தூதுக் குழுக்கள் பரிமாற்றம்

ரூ. 7½ இலட்சம் செலவு

புதுடில்லி, மார்ச் 7—

நடப்பு நிதி ஆண்டில் நான்கு வெளிநாட்டு கலாச்சார தூதுக் குழுக்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன; இத்தூதுக் குழுவின் சம்பந்தமான செலவுகளுக்காக ரூ 3,93,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அதே காலத்தில், இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு நான்கு இந்திய கலாச்சார தூதுக் குழுக்கள் அனுப்பப்பட்டன; அவைகள் சம்பந்தமான செலவுகளுக்காக ரூ. 3,56,401 அனுமதிக்கப்பட்டது.

இந்தத் தகவலை, கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி செயலாளர் டாக்டர் எம். எம். தாஸ், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சிறைக்கோட்டத்தில் திலகர் பேரன்!

சம்யுக்த மராட்டியம் கோரி கிளர்ச்சி

144 தடையை மீறியதற்காக 15 நாள் சிறைத்தண்டனை

பெல்காம், மார்ச் 9—

லோகமான்ய திலகரின் பேரனான ஜயந்த்ராவ் திலக், மராட்டியரின் நியாயமான கோரிக்கைக்காகச் சிறைக்கோட்டம் புகுந்து குடும்பத்தின் வீரப் பாரம்பரியத்தை நிலைநாட்டியிருக்கிறார்.

ஏற்கனவே அறிவித்தபடி அவர், பம்பாயை மராட்டியத்துடன் இணைக்கக் கோரி நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்.

நேற்று, முதன்முதலாக விதிக்கப்பட்டிருந்த 144 தடை உத்தரவை மீறி, சம்யுக்த மராட்டிய சமிதியின் சார்பில் வேறு 11 பேர்களுடன் ஊர்வலம் வந்தபோது அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பின்னர், பெல்காம் நகரின் பிரதான கடைத் தெருவில், வேறொரு குழு தொடர்ந்து தடை உத்தரவை மீறியிருக்கிறது.

கைது செய்யப்பட்ட மொத்தம் 20 பேர்களும், தலை ஐம்பது ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்து அனைவரும் 15 நாள் சிறைத் தண்டனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மராட்டியத்துடன் பம்பாய் நகர் இருக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கைக்காக, திலகர் பேரன் திலகர் தலைமையுள்ள இந்த நேரடி நடவடிக்கைப் போராட்டம், தொடர்ந்து நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

விடுதலைப் போராட்டத் தலைவர் நாடுகடத்தப்பட்டார்!

வெள்ளையர் ஆதிக்க வெறி

சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவரான மகாரியஸ் பாதிரியார் நாடு கடத்தப்பட்டிருக்கிறார்.

பிரிட்டனின் ஆதிக்கப் பிடியிலிருந்து விலகி, சைப்ரஸ் கிரேக்க நாட்டுடன் இணைய வேண்டுமென்பதற்காக அவர் நடத்திவரும் மகத்தான கிளர்ச்சிகளை எப்படியேனும் நிறுத்திவிட வேண்டுமென்பதற்காகவே மகாரியஸ் பாதிரியாரையும், அவரது உறுதுணைவர்களான நால்வரையும் பிரிட்டிஷ் ஆதிக்கியவாதிகள் நாடு கடத்தியிருக்கின்றனர்.

கிரேக்க நாட்டுத் தலைவரான ஏதென்ஸ் நகருக்கு விமான மூலம் புறப்படவிருந்த மகாரியசை வழி திருப்பி, வஞ்சகமாக நாடு கடத்தியிருக்கின்றனர்.

சைப்ரஸ் விடுதலை கோரும் பாதிரியார்மீது, வழக்கமான ஏகாதிபத்தியப் போக்கில் பிரிட்டிஷார், 'கலகத்தைத் தூண்டுகிறார்; பலாத்காரத்திற்குத் தூபம் போடுகிறார்' என்று குற்றம் சாட்டி வருவதுடன், கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தவிருந்த மகாரியசை இப்போது எங்கே கொண்டு செல்லுகிறோம் என்பதையும் அறிவிக்காமல் நாடு கடத்தியிருக்கின்றனர்.

நிகோசியாவில் விமான மேறப்போன மகாரியசை, புதிய விமான நுழைவுச் சட்டங்கள் என்று கூறி, தனியாகக் காரில் வேறு வழியாக அழைத்துச் சென்று, ஹெலிகாப்டர் விமான மூலம் எங்கோ கொண்டு சென்று வஞ்சகமாக நாடு கடத்தியிருக்கின்றனர்.

ஏதென்சுக்குப் பாதிரியாருடன் செல்லவிருந்த அவரது

(4-ம் பக்கம் பார்க்க)

திரு-கொச்சி நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் படுதோல்வி

27-ல் 8-ல் மட்டுமே பெரும்பான்மை பலம்

4 இடங்களில் தி. த. நா. கா. பெரும் வெற்றி

திரு-கொச்சி மாநிலத்தில் நடைபெற்று முடிவுற்றுள்ள நகரசபைத் தேர்தல்களில், 27 நகரசபைகளில் 8 நகரசபைகளில் மட்டுமே காங்கிரசுக்கு பூரண மெஜாரிடி கிடைத்திருக்கிறது.

தென் திருவாங்கூரைச் சேர்ந்த நாகர்கோவில், பத்மநாபபுரம், குருஜீச்சல், குழித்துறை ஆகிய நான்கு நகரசபைகளையும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசாரும், மற்றும் அவர்களின் ஆதரவாளர்களும் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் எண்ணிக்கை

கொழும்பு, மார்ச் 9—

1954 ஜனவரி முதல் 1956 பிப்ரவரி வரை, இந்திய 'பாஸ்போர்ட்' வைத்திருந்த 27,000 பேர் இலங்கையிலிருந்து இறுதியாக வெளியேறிவிட்டனர் என்று தெரியவருகிறது.

இந்த ஆண்டு 17,784 பேர் தாங்களாகவே வெளியேறினாராம். இந்தியரை வெளியேற்றும் திட்டத்தின் கீழ் இலங்கை சர்க்கார் 'நோட்டீஸ்' தந்ததின் பேரில் 9,374 பேர் வெளியேறியதாகவும் கூறப்படுகிறது.

'என்னைப் பிடித்துத் தள்ளினர்'

'என் சட்டையைப் பற்றி இழுத்தனர்'

சட்ட சபையில் வங்க முதன் மந்திரி தகவல்

"என் சட்டையைப் பற்றி இழுத்தனர். என்னைப் பிடித்துத் தள்ளினர். எனக்கு எழுபத்தைந்து வயதாகி இருந்தபோதிலும் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, கூட்டம் நடக்கும் கட்டிடத்திற்குள் எப்படியோ நுழைந்துவிட்டேன்."

இவ்வாறு மேற்கு வங்க முதலமைச்சர், சட்டசபையில் தகவல் தந்தார்.

கடந்த மாதம் 28-ந்தேதி மத்திய கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட மேற்கு வங்க முதன் மந்திரி பி. சி.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 10-3-'56 சனி

தொகை பெருகட்டும்!

★

திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிளைகள் நாடெங்குமாகத் தழைத்திருக்கின்றன—என்று, 1953-ம் ஆண்டில் கழகம் மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டதை ஒட்டி அண்ணா உள்ளிட்ட ஐவர் மீது தொடரப்பட்ட வழக்கில் சர்க்கார் தரப்பில் சாட்சியம் கூறிய உயர்தரப் போலீஸ் அதிகாரி புள்ளி விவரம் தந்தார். நமது கழகத்தின் உருவமும், ஆற்றலும் கண்டு நமது மாற்றாரும், அரசியலாரும் அதிர்ச்சியுற்றனர். கழகத்தில் இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிளைகளில் அணிவகுத்து நிற்கிறார்கள் என்ற செய்தி, அரசாங்க முத்திரையோடு வெளியிடப்பட்டபோது, நாம் பெருமைப்பட்டோம்; பூரித்தோம்.

தென்னாட்டு மக்களைப் பொறுத்தமட்டில், அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் சூழ்ந்து நிற்கும் பெருங்கேடுகளுக்கு நிரந்தரமான பரிகாரம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய ஈடேற்றத்தில்தான் இருக்கிறது என்பதை, அடுக்கடுக்காக முளைத்துவரும் சிக்கல்கள் தெளிவாகக் கூறும்.

'ஏக இந்தியா' என்ற ஏகாதிபத்திய அரசியல் அமைப்பை உடைத்தெறிந்து, திராவிடம், அரசியல் ஆதிபத்திய உரிமை கொண்ட—முழு விடுதலையோடு கூடிய நாடாகத் திகழ வேண்டும் என்ற நமது இலட்சியமும், அந்த இலட்சிய ஈடேற்றத்திற்காக நாம் திரட்டிவரும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பும், தென்னாட்டில் நமது மாற்றாராக இருந்துவரும் பலரது நெஞ்சங்களையும் தடவியிருப்பதுடன், நமது வடநாட்டு எதிரிகளின் உள்ளத்தையும் குடைந்திருக்கிறது.

ஒரு மகத்தான விடுதலை நோக்கோடு நாம் திரட்டிவரும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பினை உணர்ந்துள்ள நமது மாற்றார், இப்போது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தின் காரணமாகவே ஓரளவேனும் தென்னாட்டின் மீதுள்ள வடநாட்டு ஆதிக்கம் குறித்துப் பேசி வருகின்றனர். நமது இலட்சியம், இங்கு நம்மை முழுமூச்சுடன் எதிர்க்க வேண்டும் என நினைக்கும் பிற்போக்காளர்களைக்கூட சிந்திக்கச் செய்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. வடநாட்டு எதிர்ப்பு உணர்ச்சி, வேறெப்போதையும்விட இப்போது தென்னாட்டில் அதிகமாகியிருக்கிறது.

தென்னாட்டை நிரந்தரமான அடிமைக் காடாக்கி வைத்திருக்க வேண்டும் என்பதற்காக வடநாட்டவர் மேற்கொண்டுவரும் கீழ்த்தரமான ஏகாதிபத்திய வெறியோடு கூடிய நடவடிக்கைகள், 'வடநாடு—தென்னாடு என்று பேசுவதே பாபம்' என்றெண்ணிக் கிடந்தோரையும் துணுக்குறச் செய்திருக்கிறது.

தென்னாட்டில் தங்களுக்கு எதிர்ப்பு வளர வளர, வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தங்கள் ஆதிக்கப் பிடிப்பை பலப்படுத்திக்கொள்ளும் முயற்சிகளையும் துரிதமாகச் செய்து வருகின்றனர்.

இந்தக் கட்டத்தில், தி. மு. கழகத்திற்கு முன்னைவிடச் சிறப்பான கடமைகள் நிரம்ப இருக்கின்றன.

கழகத்தின் இலட்சியத்திற்கு நாட்டு மக்களிடையே நல்லாதரவு பெருகி வருகிறது என்பதைக் கழகத்தின் உருவையும், வலிவையும், பொலிவையும் கொண்டுதான் கணக்கிட முடியும்.

மழை பெய்கிறது; ஆனால், அந்த நீர் ஏரியில் தேக்கப்படும் போதுதான், தேவையான போது பயன்பட முடியும். அதுபோல, மக்களிடத்தில் கழகத்திற்குள்ள ஆதரவு பெருகுகிறது என்றால் அந்த ஆதரவு திரட்டப்பட்டால்தான், கழகம் அமைக்கப்பட்டுள்ள அடிப்படை இலட்சியம் பலிதமாகப் பயன்பட முடியும். ஆற்றல் கொண்ட மக்கள் சிதறுண்டு கிடந்தால் பயனில்லை. திராவிடரின் முழு விடுதலையோடு கூடிய நிரந்தரமான நல்வாழ்வு திராவிட நாடு திராவிடருக்காவதில்தான் உள்ளது என்பதால், திராவிட நாட்டை திராவிடர் ஆள, ஆற்றல்கொண்ட மக்கள் ஒன்று திரண்டாகவேண்டும். அப்படி தி. மு. கழகத்தில் ஒன்று திரளுமாறு—உறுப்பினர்களாகச் சேர்ந்து கழகத்தை வலுப்படுத்துவதின் மூலம் தங்கள் வாழ்வு ஈடேற வழிசெய்து கொள்ளுமாறு திராவிடரை அழைக்கிறோம் என்று ஒரு திங்கள் முன்பே எழுதியிருந்தோம்.

கழகத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குரிய காலத்தை நீடித்தும், மார்ச் திங்கள் 12-ந் தேதி முதல் 18-ந் தேதி வரை உறுப்பினர் சேர்க்கும் வாரம் கொண்டாடுமாறு கோரியும் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையை நாட்டவரும், கழகத் தோழர்களும் கண்ணுற்றிருப்பர்.

கழகத் தோழர்களுக்கு உறுப்பினர் சேர்க்கும் பணியின் அவசியம் உணர்த்தப்பட வேண்டிய ஒன்றல்ல. உறுப்பினர் சேர்க்கும் வாரத்தின் போது, நாட்டு மக்களிடத்தில் உசிதமான முறைகளில், 'கழகத்தில் உறுப்பினராக வேண்டியது அவர்களது நாட்டு விடுதலைக்காற்ற வேண்டிய புனிதமான கடமை' என்பதை விளக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு கட்சியின் குரலுக்குக் கிடைக்கும் மதிப்பு, பெரும் பகுதி அதன் அளவைக் கொண்டு கணக்கிடப்படுகிறது என்பதையும் தோழர்கள் உணர்வார்களாக.

தி. மு. கழகம், நாள்தோறும் வளரும் விடுதலை இயக்கம் என்பதை நமது பகைவர் கண்டு மருளும் அளவுக்கு உறுப்பினர் தொகை பெருகட்டும்.

அரசியற் கருத்துப் போராட்டங்களில் கவர்னர் ஈடுபடலாமா?

'அப்பதவியின் பெருமைக்கும் மதிப்புக்கும் அது இழுக்காகும்'

'அரசியல் மேலிடத் தலைவர்களுக்கு இணக்கமாக நடக்க அவர் முன்வந்துள்ளார்'

'அவர் போக்கு மக்களாட்சி மாண்பிற்குப் புறம்பானது'

"பரீலி சுழற் குழு ('ரோட்டரி') சங்கத்தில், சென்னை மாகாண கவர்னர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவு, பல வாதங்களுக்கு 'இடந் தருவதாயிருக்கிறது. முதலில், 'அரசியல் வாத எதிர்வாதங்களில், கவர்னர்கள் கலந்துகொள்ளக் கூடாது' என்ற ஒழுங்கிற்குப் புறம்பாக அச்சொற்பொழிவு அமைந்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

"அரசியல் கருத்துப் போராட்டங்களில் ஈடுபடுவது கவர்னர் பதவியின் மதிப்பிற்கும், பெருமைக்கும் இழுக்காகும் என்ற கொள்கை, ஆங்கிலேய ஆட்சியினர் காலத்தில் நன்கு பின்பற்றப்பட்டு வந்தது.

"குறிப்பாக, கட்சிப் போராட்ட அரசியலுக்கும், மக்கள் கருத்தறிவுறுத்தும் இயக்கங்களுக்கும் அப்பாற்பட்ட தனிப் பொதுநிலையில் அவர்கள் இருந்துவந்தார்கள். ஆகையால் யாரும் கவர்னர்களைப் பற்றிக் குறைகூறுவதோ, அல்லது அவர்களுடைய கருத்தைக் குறித்துக் கண்டனம் செய்வதோ, இயலாத தன்மையில் அவர்கள் மாகாண அரசாங்கத்திற்குத் தலைவர்களாக இருந்தார்கள்.

"ஆனால், அந்நிலைமை இப்போது சீர்கேடடைந்துவிட்டது; கவர்னர்கள் நேரடியாக அரசியலில் தலையிட்டு, கருத்துப் போராட்டங்களில் பங்கு கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

"தற்போது, அரசியல் கருத்துப் போராட்டங்களில் முதன்மையானது, மொழி வழி மாகாணப் புனரமைப்புக் கொள்கையைப் பற்றியதாகும். இக்கொள்கையை, அனைத்திந்திய அரசியலில், நிரந்தரமான தன்மையில் உருவாக்கிய சிறப்பு காங்கிரசுக் கட்சிக்கே உரியதாகும்.

"ஆனால், மொழிவழிக் கொள்கையின் மூலம் மக்கள் ஆதரவையும், வலிமையையும் பெற்று, அவற்றைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின், காங்கிரசுக் கட்சியினர் அடிப்படைக் கொள்கையை அடியோடு புறக்கணித்துவிட்டனர்.

"மாகாண புனரமைப்புக் குழுவின் ஆலோசனைகளைக் குறித்து, காங்கிரசுச் செயற்குழு செய்துள்ள முடிவுகள் இப்புறக்கணிப்பின் விளைவுகளாகும்.

"இவை மக்களின் கருத்திற்கும், காங்கிரஸ் தலைவர்களின் கொள்கைக்குமிடையேயுள்ள பெரு வெளியின் அளவை விளக்கமாகக் காட்டியுள்ளன.

"சென்ற சில வாரங்களாக, நாட்டின் பல பாகங்களில் நிகழ்ந்த கலவரங்களும், கலகங்களும், இவ்வேறுபாட்டின் உணர்ச்சிவயப்பட்ட சான்றென்பதை, சென்னை கவர்னர் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணர்ச்சி மிகுந்த கருத்து, சொல், செயல் ஆகிய முப்பெரும் போராட்டச் சூழலிலிருந்து அவர் விலகியிருக்கவேண்டும். அதற்கு மாறாக, அக்குழப்பத்தில் அவர் தலையிட்டு, மக்கள் கருத்தைத் தீவிரமாகக் கண்டிக்கும் முறையில் சில சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

'மொழிவழிக் கொள்கையை 'வெறியுணர்ச்சி' யென்றும், அதை ஒழுங்காகப் புதைப்பதற்கு வழி இருமொழி மாகாணக் கொள்கை' யென்றும் அவர் கூறியிருக்கிறார். அரசியற் போராட்டங்களில் தீவிரமான சொற்களை இயல்பாகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளின் தரத்திற்கு, சென்னை மாகாண கவர்னர், தம்மைத் தாழ்த்திக் கொண்டது ஒழுங்கல்ல என்று கூற விரும்புகின்றோம். அனைத்திந்திய முறையில், மொழிவழி மாகாணக் கொள்கையை ஆதரிக்கும் மக்கள் கருத்தை 'வெறியுணர்ச்சி' என்று குறிப்பிட்டிருப்பது, தாம் வகித்துவரும் பதவியின் தன்மையையும் பெருமையையும் மறந்ததாகும்.

"அரசியல் மேலிடத் தலைவர்களுக்கு இணக்கமான இருமொழி மாகாணக் கொள்கைக்குப் பிரசாரம் செய்ய அவர் முன்வந்துள்ளார். இதைப்போன்ற நிலைமை, இந்திய அரசியல் வரலாற்றில் இதுகாறும் நிகழ்ந்ததேயில்லை என்று கூறலாம்.

"மக்களின் கருத்து விளக்க ஒலியே தெய்வக் கருத்தொலி' என்பது, மக்களாட்சி அரசியலில் வழங்கிவரும் ஒரு மூதுரையாகும். ஆனால், 'மக்கள் கருத்திற்கு மதிப்பிடும் முறை, ஆழத் தோண்டி மண்மூடிவிடுவதே!' என்ற பொருள்கொண்ட புதிய கொள்கையைச் சென்னை கவர்னர், சுழற்குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

"பதவிக்கும் பண்பிற்கும் புறம்பானதோடுகூட, சென்னைக் கவர்னர் சொற்பொழிவு மக்களாட்சி மாண்பிற்கும் புறம்பானதென்பது அவர் தெரிவித்துள்ள மற்றொரு கருத்திலிருந்து விளங்குகிறது.

'அனைத்திந்தியாவிற்கும ஒரே ஆட்சிமொழி, எல்லா மக்களும் ஒரே அரசாங்கத்திற்கு உண்மையாக இருத்தல் - இக்கொள்கைகளையே மக்களுக்கு ஊட்ட வேண்டும். என்னுடைய விருப்பத்தின்படி செல்ல இடமளித்தால், வேண்டுமென்றே இருமொழி மாகாணங்களைத் தோற்றுவிப்பேன்'— என்று அவர் கூறியிருக்கிறார். அப்படிச் செய்வதன் மூலம் மொழி வழிக் கொள்கை உணர்ச்சியை அவர் வேரறுத்து விடுவாராம்! இத்தகைய சொற்பொழிவுகள் தறபோதுள்ள அரசியல் அவல நிலைமையையும உயர்ந்த பண்புகளை இழந்த தன்மையையும் நன்கு காட்டுகின்றன. மக்களாட்சிப் பண்புகளையும், ஒழுங்குகளையும் பாதுகாக்க விரும்பும அரசியல் அறிஞர்கள், இத்தகைய சீர்கேடுகள் இனி மேல் நிகழாதவாறு தக்க பாதுகாப்புகளை ஏற்படுத்தவேண்டும."

—5-3-56 'தமிழ் நாடு' இதழின் தலையங்கத்தின் சில பகுதிகள்தான் மேலே தரப்பட்டிருப்பவையாகும்.

'அசாம் எல்லையோரத்திலிருப்பவர் அப்பகுதி நண்பர்களுடன் தொடர்பு கொள்ளாதது ஏன்?'

'தொடர்புகொள்ள தேவரைமட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டது ஏன்?'

ஷா நவாஸ்கான் ஐயம்!

"சுபாஷ் சந்திர போஸ் உயிருடனிருக்கிறார் என்று முத்துராமலிங்கத் தேவர் கூறிவருவது குறித்து நான் இப்போது ஒன்றும் கூறுவதற்கில்லை; ஆனால், இந்தியாவில் உள்ள எல்லா மக்களையும் விடுத்து, தேவரிடம் மட்டும் ஏன் சுபாஷ் போஸ் தொடர்புகொள்ள வேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை.

"இதில் மேலும் ஆச்சரியப்படக்கூடியது என்னவென்றால், சுபாஷ் போஸ், அசாம் எல்லையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியானால், அசாமிலும், மேற்கு வங்கத்திலும் அவருக்குள்ள நெருங்கிய தோழர்களுடன் தொடர்பு கொள்ளுவது அவருக்கு சுலபமானதாயிற்றே!"

என்று, சுபாஷின் தேசிய விடுதலைப் பட்டாளத்தில் ஒரு பிரபல அதிகாரியாகவும், சுபாஷின் நெருங்கிய சகாவாகவும் இருந்த ஷா நவாஸ்கான் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

முத்துராமலிங்கத் தேவர், 'சுபாஷ் இறந்த மர்மம்' குறித்து விவரிக்க நிறுவப்பட்டுள்ள குழு முன் சாட்சிகூற வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்பு, தேவர், தாம் சுபாஷ் போசுடன் கடந்த ஏழாண்டு காலமாகத் தொடர்பு கொண்டிருப்பதாயும், அண்மையில் பர்மா சென்றிருந்தபோது, சுபாஷ் போசைச் சந்தித்துத் தொடர்புகளை புதுப்பித்துக் கொண்டதாகவும், சுபாஷ் ஆசிய விடுதலை இராணுவத்தின் ஒரு பிரிவுக்குத் தளபதியாக சீன மாகாணமான சிகியாங்கிலிருப்பதாகவும், சீன சர்க்கார் அவருக்கு முழு பாதுகாப்பும், உரிமைகளும வழங்கியிருப்பதாகவும் கூறியிருந்தார்.

காஷ்மீர் பற்றி 'சீட்டோ' மாநாட்டு முடிவில் அறிக்கை

சோவியத் தலைவர்களுக்குக் கண்டனம்

கராச்சி, மார்ச். 8—

"காஷ்மீர் விவகாரத்தை ஐ. நா. மூலமாகவோ, அல்லது, இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதின் மூலமோ தீர்த்துக்கொள்ள வேண்டும்"

என்று கராச்சியில் மூன்று நாட்களாக நடைபெற்ற 'சீட்டோ' கவுன்சில் கூட்ட இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது.

'காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' என்ற ஐ. நா. தீர்மானம் இன்னும் உயிருடன்தான் இருக்கிறது எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

பாகிஸ்தானுக்கும் — ஆப்கனிஸ்தானுக்கும் உள்ள எல்லையாக 'டூராண்ட்' கோடுதான் இருக்கும் என்றும், அதையே சர்வதேச எல்லையாக, 'சீட்டோ' ஏற்றிருக்கிறது என்றும் அறிக்கை கூறுகிறது.

[1893-ம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கும் — ஆப்கானியர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது, பிரிட்டிஷாரின் ஆதிக்க எல்லையாக நிர்ணயிக்கப்பட்ட கோடுதான் 'டூராண்ட்' எல்லை என்பது, அந்தப் பேச்சு வார்த்தைகளின் போது சர்மார்டிமர் டூராண்டு என்பவர்தான், பிரிட்டிஷார் சார்பில் பிரதம தூதுவராக இருந்தார்.]

சோவியத் தலைவர்கள் சில தினங்களுக்கு முன்பு காஷ்மீர் போன்ற விவகாரங்களில் குறுக்கிட்டு, கருத்தறிவித்தது கண்டனத்திற்குரியது' என்றும், 'அவர்களது அறிவிப்பு நெருக்கடியை அதிகரிக்கவும், ஆசிய நாடுகளிடையேயும், இதர சுதந்திர நாடுகளிடையேயும் பிளவுகளை வளர்க்கவுமே உதவக் கூடியன' என்றும், 'சீட்டோ' அறிக்கை கூறுகிறது.

★

ஐ. நா. வட்டார நிலை

'சீட்டோ'வில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டிற்கும், ஐ. நா.-வில் உறுப்பினராயுள்ள ஒரு நாட்டிற்கும் இடையே தகராறில் உள்ள ஒரு விவகாரம்குறித்து 'சீட்டோ' கருத்தறிவிக்க முற்பட்டிருப்பது ஐ. நா. வட்டாரங்களில் மகிழ்ச்சிக்குரியதாகக் கருதப்படவில்லையாம்.

'சீட்டோ' விவகாரம் குறித்து புதியதாக எதுவும் தெரிவித்துவிடவில்லை. திரும்பத் திரும்ப ஐ. நா. தெரிவித்துள்ள கருத்தையே கூறியிருக்கிறார்கள்.

காஷ்மீர் பற்றி ரஷ்யத் தலைவர்கள் அறிவித்த கருத்தின் விளைவுகளைச் சமன் செய்வதுதான், 'சீட்டோ' நாடுகளும் பகிரங்கமாகக் காஷ்மீர் பற்றி கருத்தறிவித்ததின் நோக்கம் என்றால்—அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டும் என்றும் ஐ. நா. வட்டாரம் கருதுகிறதாம்.

★

அதிர்ச்சி தரும் விவகாரம்

மக்கள் சபையில், 'சீட்டோ' கவுன்சில் கூட்டம் காஷ்மீர் குறித்து விவாதிக்கும் விஷயம் சிறிது புழுக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

கேள்விகள் கேட்கப்பட்டன; பிரதமர் நேரு, 'இது நமக்கு அதிர்ச்சி தரக்கூடிய விவகாரமாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜ்யங்கள் சபையிலும் இந்த விவகாரம் பேசப்பட்டிருக்கிறது. சில உறுப்பினர்கள் 'இது குறித்து விவாதிக்க சபைக்கு அவகாசம் தரவேண்டும்' என்றும் கூடக் கோரியிருக்கின்றனர்.

★

'சீட்டோ' முடிவுகள் உபயோகமற்றவை!

"'சீட்டோ' முடிவுகளுக்காக பக்தூனிஸ்தான் பிரச்சினையில் தன் கொள்கையை ஆப்கானிஸ்தான் மாற்றிக்கொள்ளாது; 'சீட்டோ' முடிவுகள் உபயோகமற்றவை"

என்று, புதுடில்லியில் உள்ள ஆப்கன் தூதுவராலயம் பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் கூறுகிறது;

சர்க்கார் பதவியும் அரசியல் ஈடுபாடும்

'பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குமுன், தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் அரசியல் கருத்தை அறியுமாறு பொதுப்பணித் தேர்வுக் குழுவிற்கு சர்க்கார் தாக்கீது அனுப்பியிருக்கிறதா?' என்று சென்னை சட்டசபையில் கேட்கப்பட்டபோது, 'இல்லை' என்று பதிலளித்திருக்கிறார், நிதி மந்திரி.

மீனவருக்கு வலைகள்!

மீனவர்களுக்கு வழங்குவதற்காக சுமார் ரூ. 1,90,000 செலவில் 300 'நைலன்' வலைகளையும், ஒரு இலட்சம் 'வலை கொக்கி'களையும் வாங்குவதற்கு சென்னை சர்க்கார் அனுமதி அளித்திருப்பதாக தெரிய வருகிறது.

கண்டுபிடிக்க முடியாது போன திருட்டுகள் 2,573

சட்டசபையில் தகவல்கள்

கணக்கை அதிகப்படுத்திக்காட்டுவதற்காக, போலீசார் வேண்டுமென்றே வழக்குகள் தொடுப்பதாக சென்னை சட்டசபையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லை என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

'உயர் அதிகாரிகள் மிகுந்த உன்னிப்புடனிருக்குமாறு கோருவதால்தான், போலீசார் தீவிரமாகக் கண்காணித்து வழக்குகள் தொடுக்கின்றனர்,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'விபசார விடுதிகள் நடத்துவதற்குப் போலீசாரும் துணை புரிகின்றனர்' என்று கூறப்பட்டபோது, 'போலீசார் எவருமே இத்தகு நடவடிக்கைகளுக்குத் துணை புரிவதில்லை என்று நான் கூறத் தயாரில்லை; அவர்கள் அவர்கள் இதற்கு விதிவிலக்கு' என்றும் மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

1955-ம் ஆண்டில், விபசார விடுதி நடத்திய 22 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது; சூதாடியதாக 6,460 பேர் கைது செய்யப்பட்டனர்; திருட்டு சம்மந்தமாக 2,223 பேர் கைது செய்யப்பட்டனர்; 2,022 வழக்குகள் பதிவாயின; கண்டுபிடிக்கமுடியாதவை என 2,573 திருட்டுகள் அறிவிக்கப்பட்டன' என்ற புள்ளி விவரங்களையும் மந்திரி தந்திருக்கிறார்.

அவருக்கு எப்படித் தெரியும்?

சென்னை, மார்ச் 8—

"விற்பனை வரியிலிருந்து நூல் நூற்கும் கருவிகளுக்கு விலக்கு அளிக்குமாறு திருப்பூர் காந்திநகர் சஞ்சலக் அகில பாரத் சர்வ சேவா சங்கத்திடமிருந்து சர்க்காருக்குக் கோரிக்கை வந்தது" என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சட்ட சபையில், அமைச்சர் மாணிக்கவேலர் கூறியதை யொட்டி மேலும் கேள்விகள் எழுந்தன.

கே:- 'இந்தச் சங்கம் தமிழ்ப் பெயரா?'

ப:- 'இத்தகைய பெயர்களை இனி அதிகமாகத் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கும்.'

கே:- 'சங்கத்தை ஏற்படுத்தியது தமிழரா, வடநாட்டவரா?'

ப:- 'வடநாட்டவரா, கிழக்கு நாட்டவரா, தென்னாட்டவரா என்பது எனக்குத் தெரியாது.

ஓட்டல் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்

சென்னை, மார்ச் 8—

சென்னை சட்ட சபையில் கேள்வி நேரத்தின்போது, ஓட்டல்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு சட்டமியற்ற சர்க்கார் உத்தேசித்திருக்கிறது என்று தொழிலமைச்சர் கூறியுள்ளார்.

மாணவரிடை தகராறு

சட்ட சபையில் கேள்விகள்

சென்னை விக்டோரியா மாணவர் விடுதியில் தமிழ்—மலையாளி மாணவர்களுக்கிடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் கைகலப்பு பற்றி சென்னை சட்டசபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

தமிழ், மலையாள மாணவர்களிடையே மோதுதல் ஏற்பட்டதாகக் கூறுவது தவறு எனவும், சில மாணவர்கள் கடந்த 11-11-55ல், விவாதம் நடைபெற்றபோது ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகவும், இதுகுறித்து விடுதி அதிகாரி விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார் எனவும், இரு மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றும் மந்திரி சுப்பிரமணியம் பதிலளித்திருக்கிறார்.

'தட்சிணப் பிரதேச அமைப்பை ஒட்டி எழுந்த தகராறல்ல அது' என்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது மந்திரி கூறியிருக்கிறார்.

டீசல்எண்ணெய் வரி விதிப்பு

விவசாயிகளுக்கு அதிகச் செலவு உண்டாகாதபடி 'டீசல்' எண்ணெய் வரி விதிப்பு முறை மாறுவதற்கு வழி காணும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ள டீசல் எண்ணெய் 'எக்சைஸ்' தீர்வையைப் பரிசீலனை செய்வதாக நிதிமந்திரி தேஷ்முக் ராஜ்யங்கள் சபையில் உறுதியளித்திருக்கிறார்.

'மத்திய கல்வி இலாகா அவசியமே'

'தேசீய உணர்வை கல்வி மூலம் ஊட்ட வேண்டியுள்ளது'

மத்திய மந்திரி கருத்து

புதுடில்லி, மார்ச் 8—

"14 வயதுக்குட்பட்டவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்ற கொள்கையை, அமுல் செய்ய சர்க்கார் எப்படியேனும் வழிவகை தேடும்,"

என்று, உதவிக் கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கல்வி மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில், குறுக்கிட்டுப் பேசிய அவர் மேலும் கூறியதாவது:—

"ஜனநாயகம் செழித்து வளர வேண்டுமானால், பள்ளி செல்லும் வயதுடைய அத்தனை குழந்தைகளும் கல்வி பெற வேண்டுவது இன்றியமையாததாகும். நீண்டநாளைக்கு இதை ஒத்திப்போட முடியாது. இதற்குப் பணம் செலவிடும் கஷ்டமிருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றைச் சமாளித்துத்தானாக வேண்டும். இந்த விஷயத்தில் மாநில மத்திய சர்க்கார்கள் தங்களாலான எல்லா வழிகளையும் கண்டாக வேண்டும்."

மேலும் பேசிய அவர், மத்திய சர்க்காரில் உள்ள கல்வி இலாகாவை ஒழித்துவிட வேண்டும் என்ற யோசனையை நிராகரித்தார்.

கல்வி விவகாரத்தை மாநில அரசாங்கங்கள் ஏற்கனவே கவனித்து வருவதால், மத்திய சர்க்காரில் இலாகா தேவை இல்லை என்று ஒரு காங்கிரஸ் உறுப்பினர் கூறியிருந்தார்.

"தேசிய உணர்வு கல்வி மூலம் ஊட்டப்பட வேண்டியுள்ளது; இதற்காக, மத்திய சர்க்கார், கல்விக்கான ஒரு தேசியக்கொள்கையை உருவாக்க வேண்டியுள்ளது,"

என்று, டாக்டர் மாலி குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள இந்தி மொழி மாநிலங்கள்

ஆறு மாநிலங்கள் இந்தியை மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்திருக்கின்றனவாம்.

ஆஜ்மீர், பீகார், மத்திய பாரத், மத்திய பிரதேசம், இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் என்பவைதான் அந்த ஆறு மாநிலங்களாகும்.

இந்த தகவல்களை உள்நாட்டு விவகார மந்திரி பி. என். தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இயலாதாம்!

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை பற்றி பிரதமர் நேரு

மக்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது, பிரதமர் நேரு, தென்னாப்பிரிக்க இந்தியர்கள் நடத்தப்படும் விதம் பற்றிய பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவிட முடியுமென்ற நம்பிக்கை மிகவும் குறைவாக இருப்பதாகவும், ஆனால், மனிதன் நம்பிக்கையை இழந்துவிடுவதில்லையென்றும் கூறியுள்ளார்.

வேறொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் இப்பிரச்சினையை இந்தியா எழுப்பாதென்றும், மற்றவர்கள் எழுப்புவதையும் இந்தியா ஆலோசிக்காதென்றும் கூறினார்.

இந்தியாவில் தொழில் தகராறுகள்

சில விபரங்கள்

1955 டிசம்பர் மாதத்தில், புதிதாக மொத்தம் 92 தொழில் தகராறுகள் ஏற்பட்டுள்ளது.

அவற்றில் 91 தகராறுகளில் மொத்தம் 40,896 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனராம்.

முந்திய மாதத்தில் ஏற்பட்ட தகராறுகளின் மொத்த எண்ணிக்கை 76; அவற்றில் மொத்தம் 35,963 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

பரிசீலனை மாதத்தில் நீடித்து வந்த தகராறுகளின் மொத்த எண்ணிக்கை 122; அவற்றில் 121 தகராறுகள் மொத்தம் 44,962 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்; அவற்றில் 120 தகராறுகள் மொத்தம் 2,28,264 நபர்நாட்களில் நஷ்டமேற்பட்டன.

முந்திய மாதத்தில் நீடித்துவந்த தகராறுகளின் எண்ணிக்கை 105; அவற்றில் சம்பந்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,465; நஷ்டமான நபர்—நாட்களின் எண்ணிக்கை 1,78,135.

இம்மாதம் ஏற்பட்ட தகராறுகளில், ஏழு தகராறுகள் கதவடைப்புகளாகும். அவற்றில் மொத்தம் 8,399 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்; அவை காரணமாக மொத்தம் 29,327 நபர்-நாட்கள் வேலை நஷ்டமேற்பட்டது. அவற்றில் மூன்று கதவடைப்புகள் சென்னையிலும், இரண்டு மேற்கு வங்காளத்திலும், ஒன்று பம்பாயிலும் ஒன்று டில்லியிலும் ஏற்பட்டன.

பரிசீலனை மாதத்தில் மொத்தம் 94 தகராறுகள் முடிவுற்றன; அவற்றில் 67 தகராறுகள் ஒவ்வொன்றும் 5 நாட்களுக்கு மேற்படாமலும், 10 தகராறுகள் ஒவ்வொன்றும் 30 நாட்களுக்கு மேற்படாமலும் நீடித்து வந்தன. 25 தகராறுகளில் தொழிலாளர்களுக்கு முழுதுமோ, ஓரளவோ வெற்றி கிட்டியது; 46 தகராறுகளில் அவர்கள் வெற்றி பெறவில்லை. 18 தகராறுகளில் முடிவுகள் நிச்சயமில்லாமலும், 5 தகராறுகளில் முடிவுகள் தெரியாமலும் இருந்தன.

புதிதாக ஏற்பட்ட 21 தகராறுகளில்—34 தகராறுகள் 'சம்பளங்கள்—படிகள்' ஆகியவை பற்றியும், 25 தகராறுகள் 'இதர காரணங்கள்' பற்றியும் இருந்தன.

தம்மம்பட்டியில் துப்பாக்கிப் பிரயோகம்

பிப். 20-ந் தேதியன்று தம்மம்பட்டியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தை 25—2—56-ல் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோர் பார்வையிடுகின்றனர்.

மேலதிகாரியின் எதேச்சாதிகாரம்

ஆசிரியர்கள் பேசிக்கொண்டிருந்தார்களாம்

ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டதாம்

சென்னை, மார்ச் 9— வகுப்புகளைக் குறித்த நேரத்தில் துவக்காமல் பேசிக்கொண்டிருந்த குற்றத்திற்காக நகர சபை முஸ்லீம் ஆண்கள் பள்ளி ஒன்றைச் சேர்ந்த 4 ஆசிரியர்களுக்குத் தலா ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டதாம்.

நேற்று நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் சென்னை நகர சபைத் தலைவர் மேற்கண்ட தகவலைத் தந்தாராம்.

திரு-கொச்சி திட்டமும் துண்டுவிழும் திட்டமே

திரு-கொச்சி மாநில சர்க்காரின் 1956—57-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தினை நிதிமந்திரி ஏ. ஜெ ஜான், சட்டசபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

இதர தென் மாநில திட்டங்களைப்போலவே திரு-கொச்சியின் திட்டமும் பற்றாக்குறைத் திட்டமாகவே அமைந்திருக்கிறது.

திட்டப்படி வரவு ரூ. 1,889 90 இலட்சம் என்றும், செலவு ரூ. 2,198·38 இலட்சம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

திட்டத்தில் புது வரி விதிப்பு எதும் இடம் பெறவில்லை. ரூ 15 இலட்சம் தரக்கூடிய அபிவிருத்தி வரி விதிப்பிற்கான மசோதா எற்கனவே சட்டசபையில் தாக்கலாகியிருக்கிறது.

தங்க மோகராக்கள் !

துங்கபத்திரா அணைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாம்

ஹாஸ்பெட், மார்ச் 9— துங்க பத்திரா நீர்ப்பாசன திட்டத்திற்காக ஹம்பி எனும் இடத்தில் இழிகள் வெட்டப்பட்டபோது, 107 தங்க மோகராக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாயும், ஒவ்வொன்றும் 4 தோலா எடையுடைய அவை போலீசார் வசம் ஒப்புவிக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது. இந்தத் தங்க மோகராக்கள் ஒரு பானையில் வைக்கப்பட்டிருந்தனவாம்.

'ஜேப்படி' நடைபெறுவதெப்படி?

சினிமா மூலம் போலீசார் விளக்குவர்

சென்னை, மார்ச் 10— ஓடும் பஸ்களிலும், பஸ் நிற்குமிடங்களிலும், 'வேடிக்கை' பார்த்துக்கொண்டிருக்கும்போது எப்படி 'ஜேப்படி'த் திருடர்கள் பணப்பையைத் தட்டிக்கொள்கிறார்கள் என்பதைப் போலீசார் 'சினிமா ஸ்லைடு'கள் மூலம் எல்லா சினிமா தியேட்டர்களிலும் காட்டப்போகிறார்கள்.

18 'ஸ்லைடு'களில் இந்த 'ஜேப்படி' முறை காட்டப்படும் என்றும், இதைக் கண்டு மக்கள் உஷாராகிக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

வங்க முதலமைச்சர் தகவல்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

ராய் போனார். அங்கு பீகார்—வங்காள கூட்டு ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் மோதுதல் ஏற்பட்டது. அப்பொழுது கூட்டத்தினர்மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது.

இதுபற்றி சட்டசபையில் கேட்கப்பட்டது.

அதற்குப் பதில் கூறிய முதல் அமைச்சர், அந்தகு சூழ்நிலையில் தான், தன்னை ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கண்டவாறு தொல்லைக்குள்ளாக்கியதாகவும், அதிலிருந்து தப்பியதாகவும் குறிப்பிட்டார்.

ஒரு செய்தித் தாளின் புகைப்படமெடுக்கும் பணியாளர்ஒருவரும் கூட்டத்தில் தாக்குண்டதாகவும், அவர் வைத்திருந்த புகைப்படக் கருவியும் நாசமுற்றதாகவும் முதல் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவருக்கு ஏற்பட்ட நாசம் ஆர்ப்பாட்டக்காரரால் நேர்ந்ததா அல்லது போலீஸ் தடியடியால் ஏற்பட்டதா என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

விடுதலைப் போராட்ட..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர், மற்றும் இருவரையும்கூட ஏதென்சு செல்லவிடவில்லை.

பாதிரியாரை ஏற்றிச் செல்லவிருந்த கிரேக்க விமானம் காலியாக ஏதென்சு புறப்பட்டுச் சென்றிருக்கிறது.

நெருக்கடிநிலைச் சட்டத்தைக் காட்டி, நாடு கடத்தும் உத்தரவை கவர்னர் ஜான் கார்டிங் என்ற வெள்ளையரின் 'ஏஜெண்டு' பிறப்பித்தாராம்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டபடிதான் இந்த நாடு கடத்தல் நடைபெற்றதாம்.

இது குறித்து அறிக்கை வெளியிட்ட கவர்னர், 'மகாரியஸ், மற்றும் மூவரும் எங்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது பின்னர் அறிவிக்கப்படும்' என்று தெரிவித்திருக்கிறாராம்.

பாதிரியாருடையவும், இதாருடையவும் வீடுகள் உடனே சோதனையிடப்பட்டு, போலீசாரின் பாராவில் வைக்கப்பட்டிருக்கின்றன.

விடுதலை கோருவோருக்கு, இருபதாம் நூற்றாண்டிலும், இத்தகு கொடுந்தண்டனைகளை வழங்கும் நெஞ்சுரம் இன்னும் நாகரீகவான்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் வெள்ளையரிடத்தில் இருக்கத்தான் செய்கிறது.

பலமுறை மகாரியசுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஆதிபத்தியவாதிகள், பாதிரியாரின் முழு விடுதலைக் கோரிக்கைக்கு—சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு இணங்க மறுத்ததாலேயே நிலைமைகள் வளர்ந்தன; சுமூகமான முடிவு ஏற்பட முடியாது போய்விட்டது.

மதுரையில் கலை விழா

11-3-56 இரவு 10-மணிக்கு மதுரை தமுக்கம் மைதானம் திறந்த வெளி அரங்கில், அண்ணு அவர்கள் தலைமையில், கலை விழா நடைபெறும்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம் குழுவினர் நடிக்கும் 'விலாங்கு மனிதன்';

நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'வேலைக்காரி' நாடகத்தில் சில காட்சிகள்;

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'அசோகன்'—ஓரங்க நாடகம்;

நடிப்புச்செல்வர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும 'மணி மகுடம்' நாடகத்தில் சில காட்சிகள்;

மற்றும் நடிகை ராஜசுலோசனு பங்கேற்கும் நாடக நிகழ்ச்சிகள்.

கழகக் கூட்டம்

★

இராசிபாளையம் (சூலூர்):

(கோவை மாவட்டம்)

பிள்ளையார் கோயில் மைதானம் 12—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

இரா. ப. அய்யாச்சாமி

பேசுவோர்:

என். வி. நடராசன்

கோ. நாராயணன்

★

களியூர் :

புதூர் மடத்தில் 13—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

கே. ஏ. மதியழகன்

பேசுவோர்:

தில்லை-வில்லாளன்

ப. நாராயணன்

★

மேக்கிரிமங்கலம்:

13—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

ஆர். இராமானுசம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

என். கிட்டப்பா

கோ. சி. மணி

இரா. இராசமாணிக்கம்

* * *

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு 13—3—56 மாலை மணிக்கு மேக்கிரிமங்கலம் ஊராண்மைக் கழகச் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

எல்லையோரத்தில் இந்திய, பாக். போலீசார் துப்பாக்கிச் சண்டை!

பாகிஸ்தான் எல்லைப் போலீசார் இந்திய எல்லைக்குள் புகுந்து மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும், அமிர்தசரசிலிருந்து 55 மைல் தொலைவில் இது நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

இந்தியப் போலீஸ் நடமாட்டத்திற்கான ஒரு சிறு வழியைப் பாகிஸ்தான் போலீசார் ஆக்கிரமித்துக் கொண்டதாயும், இதை ஆட்சேபித்ததற்காக அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும், பதிலுக்கு இந்திய போலீசாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும், நெடுநேரத் துப்பாக்கிச் சண்டைக்குப் பின் இந்தியப் போலீசார் அந்த வழியை மீண்டும் கைப்பற்றிக்கொண்டதாகவும், பின்னர் இருதரப்பு உயர்தர அதிகாரிகளும் இது குறித்து விவாதித்ததாயும், முடிவுகள் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

விலை அதிகரிக்காதாம்!

'கண்ணாடி வளையல்களின் விலை அதிகரிக்காது' என்று, மத்திய நிதிஅமைச்சர் தேஷ்முக் உறுதியளித்திருக்கிறாராம்.

'திராவகத் தங்க'த்தின் இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதால், வளையல்களின் விலை உயரக்கூடும் என்று கூறப்பட்டது.

ஒரு அவுன்ஸ் 'திராவகத் தங்கம்' 40,000 இரண்டாந்தர வளையல்களுக்கும், 6,000 அழகுவகை உயர்தர வளையல்களுக்கும் பொன்னிற மளிக்க உதவும் என்றும், தீர்வையால் உள்நாட்டு 'திராவகத் தங்க' உற்பத்தி அதிகரிக்கும் என்றும் இப்போது 36,000 அவுன்ஸ் மட்டுமே உற்பத்தியாகிறது என்றும், இந்தியாவில் 3 இலட்சம் அவுன்ஸ் திராவகத் தங்கம் உற்பத்திக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும், இப்போது 1,44,000 அவுன்ஸ் உபயோகிக்கப்படுகிறது என்றும் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

திருச்சி 20-வது வட்டார தி. மு. க. தோழர்களுக்கு

11—3—56 காலை 10 மணியளவில் கழகக் கட்டிடத்தில், செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

கரூர் தி. மு. க. தோழர்கட்கு:

11—3—56 காலை 10 மணிக்கு; கருணாநிதி நாடக மன்றக் கட்டிடத்தில், கழகச் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் அதுபோது, வரவு-செலவு கணக்குகள் சரி பார்த்தல், உறுப்பினர் வாரம் கொண்டாடுதல் பற்றி முடிவு செய்யப்படும்.

உருவப்படத் திறப்பு விழா

சூளை நகர இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவர்களான திரு டபிள்யூ. வி. வெங்கட்ராவ், திரு எம். ஜே. வெங்கடகிருட்டிணனு உருவப்படங்களை முறையே திரு எம். கே. சண்முகம், டாக்டர் ஏ சீனிவாசலு ஆகியோரால் 11-3-56 மாலை 6 மணிக்கு மாணிக்கசெட்டித் தெரு, கழக மனையில் திறந்து வைக்கப்படும்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

பனைமரத்தொட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் 11—3—56 காலை 8-30 மணிக்கு திரு. இரா. ல. லிங்கராசன் தலைமையில் திரு. க. அறிவழகன் 'இலக்கிய உணர்வு' எனும் பொருள்பற்றி பேசுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

இச்சங்கத்தின் ஆதரவில, 11-3-56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில், 'கல்விச் செல்வம்' எனும் பொருள் பறறி திரு. க. வி. வரதன் தலைமையில், திரு. தொ. ரா. ஜெயராமன் சொற்பொழிவாற்றுவார்.

அடிப்படையில் ஒருமைப்பாடு உண்டாம்

வருகை குறித்து டல்லஸ்

நேருவுடன் பலமணிநேர பேச்சு

'சீட்டோ' மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, கராச்சியிலிருந்து டில்லிக்கு வந்து சேர்ந்த அமெரிக்க வெளி விவகார இலாகா மந்திரி டல்லஸ், இந்தியப் பிரதமர் நேருவை அவர்இல்லத்தில்சந்தித்து $3\frac{1}{2}$ மணி நேரத்திற்கும் அதிகமாக உரையாடிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

உலக விவகாரங்கள் குறித்தும், அவற்றில் இந்தியா, அமெரிக்கா கொண்டுள்ள கருத்து வேறுபாடுகள் குறித்தும் அவர்கள் இருவரும் பேசியதாகக் கூறப்படுகிறது.

கோவா காஷ்மீர் விவகாரங்களில் அமெரிக்காவின் நிலையை டல்லஸ் தெரிவித்திருக்கக் கூடும் என்றும் யூகிக்கப்படுகிறது.

விமான நிலையத்தில் வந்திறங்கியதும் டல்லஸ் தனது வருகையால், இந்தியா — அமெரிக்கா இடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் குறையக்கூடும் என்று தான் நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கா – இந்தியாவிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்றால், அவை சாதாரணமாக சுதந்திரமான மக்களுக்கு இயல்பானதுதான்— அவர்களிடத்தில் நிலவக்கூடியதுதான் என்றும் டல்லஸ் தெரிவித்தாராம்.

இரு சாராரிடையேயும் வேறுபாடுகளைவிட ஒருமைப்பாடுகளே அதிகம் என்றும், இரண்டொரு சிறு விவகாரங்களில்தான் வேறுபாடு இருப்பதாயும், அடிப்படையில் இரு சாராரும் ஒரு நோக்கத்திற்காகவே பாடுபடுபவர்கள் என்றும் டல்லஸ் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

வரவு—செலவுத் திட்ட இரகசியம் அம்பலம்

இருவர் கைது

டில்லி சர்க்காரின் வரவு-செலவுத் திட்ட இரகசியம் வெளியானது குறித்து போலீசார் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை ஒட்டி, டில்லியில் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன், பல இடங்கள் ஒரே நேரத்தில் சோதனை போடப்பட்டிருக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றனவாம். வழக்கொன்று பதிவு செய்து போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனராம்.

கைதானவர்களில் ஒருவர் சர்க்கார் அதிகாரி என்று நம்பப்படுகிறதாம்.

டில்லி மக்கள் சபையில் இது பற்றிப் பேசிய பிரதமர், பலர் இது சம்மந்தமாகக் கைது செய்யப்பட்டிருப்பதாயும், தீவிரமான விசாரணை நடைபெற்று வருவதாயும், திங்களன்று மேலும் விபரங்கள் தெரிவிப்பதாயும் கூறியிருக்கிறார்.

தொழிலாளர் குறை தீர சங்கத் தலைவர் உண்ணாவிரதம்

9—3—56 காலை 10-40 மணியளவில் அம்பத்தூர் சன்னத்தம்மன் கோயில் மைதானத்தில் தோழர் ஜி. எம். மதுரையார் தலைமையில் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, 2—3—56 அரசாங்க உத்தரவில் 70 பழைய தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கி, அதற்குப் பதிலாக 70 புதிய தொழிலாளிகளை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் உத்திரவை ஆட்சேபித்ததுடன், 10, 11—3—56 தேதிகளில் நால்வர் கொண்ட தூதுக் குழு ஒன்று முதலமைச்சரைச் சந்தித்து, தொழிலாளரின் குறைகளை எடுத்துச் சொல்லி நியாயம் கேட்பது எனவும், தொழிலாளரின் நியாயமான குறைகளைத் தீர்த்துவைக்க முதலமைச்சர் முன்வராவிட்டால் 12—3—56 திங்கட்கிழமை காலை 5 மணி முதல் அம்பத்தூர் சைக்கிள் பாக்டரிக்கு எதிரில் உள்ள மைதானத்தில் சங்கப் பொதுக் காரியதரிசி டி. கிருஷ்ணசாமி தொழிலாளர் குறை தீரும்வரை உண்ணாவிரதம் இருப்பது எனவும் முடிவு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

★

மார்ச் 13 : மேக்கிரிமங்கலம்
15 : துறையூர் (ரங்கநாயகிபுரம்)
16 : பட்டுக்கோட்டை
17 : குருவிக்கரம்பை
18 : தஞ்சை
22 : வேலகவுண்டன் பட்டி
23 : கந்தம்பாளையம்
25 : திருவில்லிபுத்தூர்
27 : போடிநாய்க்கனூர்

மு. கருணாநிதி

நிகழ்ச்சிகள்

மார்ச் 12 : மாயவரம்
18 : திருச்சி
25 : குன்றத்தூர்
ஏப்ரல் 1 : அரக்கோணம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.